Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

கோடிட்ட இடங்களை நிரப்புக

1._____ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப் பெரிய உருவம் ஆகும்.

2.எகிப்தியர்கள் தொடக்க காலத்தில் பயன்படுத்திய உருவ எழுத்துகள் சார்ந்த முறை _____ ஆகும்.

3._____ என்பது பல்வேறு குற்றங்களுக்கான சட்டங்களை விளக்கிக்கூறும் பண்டைய பாபிலோனியாவின் ஒரு முக்கியமான ஆவணம் ஆகும்

4.சௌ அரசின் தலைமை ஆவணக்காப்பாளர் _____ ஆவார்.

5.ஹரப்பா நாகரிகம் நிலவிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மீதுள்ள _____ உருவங்களும் ஓவியங்களும் அவர்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.

6.நைல் நதியின் இரு பக்கங்களிலும் காணப்படுவது,_____.

7.எகிப்தின் மீது பொ.ஆ.மு. 332 ல் படையெடுத்த கிரேக்க மன்னர்_____.

8.எகிப்திய அரசர்கள் _____ என்ற சொல்லால் அழைக்கப்பட்டனர்.

9._____ பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

10.உலகின் உயரமான சிற்பங்களில் ஒன்றாகக் கருதப்படுவது_____

11.எகிப்தியர்களின் கற்றலின் கடவுள்_____

12._____ நகரம் தான் பின்னர் பாபிலோன் என்று அழைக்கப்பட்டது.

13.மிகவும் புகழ்பெற்ற சிகுராட்_____ என்ற நகரில் காணப்படுகிறது.

14.சீனாவில் பாயும் இருபெரும் ஆறுகள் _____ மற்றும்_____.

15."சீனாவின் துயரம்" என அழைக்கப்படும் ஆறு_____

16. சீனா முழுவதும் பயணம் செய்து ஆட்சியாளர்களுக்கு அறிவுரை கூறிய தத்துவஞானி_____

17.நைல் நதி _____ ஏரியில் உற்பத்தியாகி மத்திய தரைக் கடலில் கலக்கிறது.

18.பண்டைய ரோமானியப் பேரரசின் தலைநகரம் இத்தாலியில் உள்ள _____

19.எகிப்திய அரசர் _____ என்று அழைக்கப்பட்டார்.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

20.சொற்களைப் படங்கள் மூலம் உணர்த்தும் குறியீட்டு முறையை _____ என்கிறோம்.
(a) அழகெழுத்து (b) சித்திர எழுத்து (c) கருத்து எழுத்து (d) மண்ணடுக்காய்வு

21.எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை _____
(a) சர்கோபகஸ் (b) ஹைக்சோஸ் (c) மம்மியாக்கம் (d) பல கடவுளர்களை வணங்குதல்

22.சுமேரியரின் எழுத்துமுறை _____ ஆகும்
(a) பிக்டோகிராபி (b) ஹைரோகிளிபிக் (c) சோனோகிராம் (d) க்யூனிபார்ம்

23.ஹரப்பா மக்கள் _____ பற்றி அறிந்திருக்கவில்லை
(a) தங்கம் மற்றும் யானை (b) குதிரை மற்றும் இரும்பு (c) ஆடு மற்றும் வெள்ளி (d) எருது மற்றும் பிளாட்டினம்

24.சிந்துவெளி மக்கள் 'இழந்த மெழுகு செயல்முறை' முறையை அறிந்திருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கும் வெண்கலச்சிலை _____ ஆகும்
(a) ஜாடி (b) மதகுரு அல்லது அரசன் (c) பறவை (d) நடனமாடும் பெண்

25.பின்வருவனவற்றுள் மெசபடோமியாவைச் சேர்ந்த நான்கு நாகரிகங்களின் சரியான காலவரிசை எது?
(a) சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள் (b) பாபிலோனியர்கள் – சுமேரியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள்
(c) சுமேரியர்கள் – அக்காடியர்கள் – பாபிலோனியர்கள்– அஸிரியர்கள் (d) பாபிலோனியர்கள் – அஸிரியர்கள் – அக்காடியர்கள் – சுமேரியர்கள்

26.கூற்று: மெசபடோமிய நாகரிகத்தின் அஸிரியர்கள் சிந்துவெளி நாகரிகத்தின் சமகாலத்தவர் ஆவர்.
காரணம்: அஸிரிய ஆட்சியாளரின் ஆவணம் ஒன்று மெலுஹாவிலிருந்து வந்த கப்பல்கள் பற்றி கூறுகின்றது.
(a) கூற்றும் காரணமும் சரி; கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது. (b) கூற்றும் காரணமும் சரி; ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
(c) கூற்று சரி; காரணம் தவறு (d) கூற்றும் காரணமும் தவறானவை

27.நைல் நதி கலக்கும் கடல்
(a) மத்திய தரைக் கடல் (b) செங்கடல் (c) அரபிக் கடல் (d) கருங்கடல்

28.எகிப்தை "நைல் நதியின் நன்கொடை" என்று குறிப்பிட்டவர்.
(a) அலெக்ஸாண்டர் (b) ஜூலியஸ் சீஸர் (c) ஹெரோடோடஸ் (d) கன்பூசியஸ்

29.பண்டைய ரோமானியப் பேரரசின் தலைநகரம்.
(a) லண்டன் (b) கிரீஸ் (c) பாபிலோன் (d) ரோம்

30.எகிப்திய கடவுள்களின் அரசனாகக் கருதப்பட்ட கடவுள்.
(a) அமோன் (b) அனுபிஸ் (c) இபிஸ் (d) ஹோரஸ்

31.எகிப்திய நாட்காட்டியில் இருந்த மாதங்கள்
(a) 10 (b) 12 (c) 14 (d) 16

32.மெசபடோமியாவின் பழமையான நாகரிகம்
(a) சுமேரிய நாகரிகம் (b) பாபிலோனிய நாகரிகம் (c) அக்காடிய நாகரிகம் (d) அஸிரிய நாகரிகம்

33.புகழ் பெற்ற அக்காடிய அரசர்
(a) சார்கான் (b) ஹமுராபி (c) அர்பனிபால் (d) என்லில்

34.தாவோயிசத்தைத் தோற்றுவித்தவர்
(a) கன்பூசியஸ் (b) லாவோ ட் சு (c) மகாவீரர் (d) புத்தர்

35.வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர்கள்.
(a) சுமேரியர்கள் (b) எகிப்தியர்கள் (c) இந்தியர்கள் (d) சீனர்கள்

36.i) மெசபடோமியாவின் மிகப் பழமையான நாகரிகம் அக்காடியர்களுடைய நாகரிகம் ஆகும்.
ii) சீனர்கள் ஹைரோகிளிபிக் முறையை வளர்த்தெடுத்தார்கள்.
iii) யூப்ரடிஸ், டைகிரிஸ் ஆகிய ஆறுகள் மன்னார் வளைகுடாவில் கலக்கின்றன.
iv) பாபிலோனிய அரசரான ஹமுராபி பெரும் சட்ட வல்லுனர் ஆவார்.
(a) (i) சரி (b) (i) மற்றும் (ii) சரி (c) (iii) சரி (d) (iv) சரி.

37.i) யாங்சி ஆறு சீனாவின் துயரம் என்று அழைக்கப்படுகிறது.
ii) வு-டி சீனப்பெருஞ்சுவரைக் கட்டினார்.
iii) சீனர்கள் வெடிமருந்தைக் கண்டுபிடித்தனர்.
iv) தாவோயிசத்தை நிறுவியவர் மீனியஸ் என்று சீன மரபு கூறுகிறது.
.
(a) அ) (i) சரி (b) ஆ) (ii) சரி (c) இ) (iii) சரி (d) ஈ) (iii) ம ற்றும் (iv) சரி.

38.புதிய கற்கால வாழ்க்கை முறை தொடங்கிய போது _____ ஆரம்பித்தனர்.
(a) நகரங்களில் (b) மாநகரங்களில் (c) கிராமங்களில் (d) நதிக்கரை ஓரங்களில்

39.தலைவரின் கீழான குழுக்கள் என்பவை இனக்குழு அமைப்புகளைவிட சற்றுப் பெரிய _____ அமைப்புகள்.
(a) கல்வி (b) சுகாதார (c) அறிவியல் (d) அரசியல்

40.எகிப்தின் மீது போ.ஆ.மு. 1700 ல் _____ படையெடுத்தனர்.
(a) ஹைக்ஸோஸ் (b) பாரசீகர்கள் (c) ரோமானியர் (d) கிரேக்கர்கள்

41. எகிப்தியர், இறப்பின் கடவுளாக _____ ஐ கருதினார்.
(a) அமோன் (b) அனுபிஸ் (c) ஹோரஸ் (d) சேத்

42.ஊகின் முதல் இராணுவ அரசு _____ ஆகும்.
(a) சுமேரிய அரசு (b) அஸிரிய பேரர்சு (c) பாபிலோனிய அரசு (d) அக்காடியர் அரசு

43.நைல் நதியின் நன்கொடை என்று குறிப்பிடப்படும் நாடு
(a) எத்தியோப்பியா (b) பாலஸ்தீனம் (c) எகிப்து (d) சூடான்

44.பாரோவின் கீழ் மாகாணங்களை ஆளும் நிர்வாகி
(a) மேயர் (b) விசியர் (c) ஆளுநர் (d) அமைச்சர்

45.கெய்ரோவிற்கு அருகில் உள்ள பிரமிடுகள் _____ பிரமிடுகள் என்று அழைக்கப்படுகின்றன.
(a) ஸ்பிங்ஸ் (b) அமோன் (c) கிஸா (d) அனுபிஸ்

46.எகிப்தியர்களின் முதன்மையான கடவுள் _____
(a) சேத் (b) ரே (c) தோத் (d) ஹோரஸ்

47.ஆசியாவின் வணிக, பண்பாட்டு மையமாக திகழ்ந்த அக்காட் நகரத்தின் தற்போதைய பெயர்
(a) பாபிலோன் (b) நைரோபி (c) காபூல் (d) கெய்ரோ

48.ஹமுராபியின் சட்டத் தொகுப்பு _____ பிரிவுகளைக் கொண்டது.
(a) 272 (b) 262 (c) 282 (d) 292

49.(i) புதிய கற்கால வாழ்க்கை முறையில் கிராமங்களில் மக்கள் பெரிய குழுக்களாக, தொல்குடி சமுதாயங்களாக இருந்தனர்.
(ii) இடைக்கற்காலக் காலகட்டத்தில் உருவான தொல்குடி அமைப்புகள் பெரும்பாலும் சமத்துவ இயல்பு கொண்டதாகவே இருந்தது.
(iii) தொல்குடி சமுதாயம் வேட்டையாடுவோர் ஆவர்.
(iv) தொல்குடி சமுதாயம் அரசின் கட்டுபாட்டில் இயங்கியது.
(a) (i) சரி (b) (i) மற்றும் (ii) சரி (c) (iii) சரி (d) (iv) சரி

50.(i) எஸ்பிங்ஸ் பிரம்மாண்டமான சிலை. சிங்க உடலும் மனித முகமும் கொண்ட சுண்ணாம்புக்கல் படிமம்.
(ii) ஸ்பிங்ஸ் மனித உடலும் சிங்க முகமும் கொண்ட சுண்ணாம்புக்கல் படிமம்.
(iii) ஸ்பிங்ஸ் பாரோ காஃப்ரெ காலத்தைய ஓவியமாகும்.
(iv) ஸ்பிங்ஸ் பாரோ காஃப்ரெயின் சமாதியாகும்.
(a) (i) சரி (b) (i) மற்றும் (ii) சரி (c) (iii) சரி (d) (iv) சரி

QB365™ Study Material
QUESTION BANK 365